NEP/CO/GEN/02

2006.05.18

**சுற்றறிக்கை இல : 05/2006**

சகல கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர்களுக்கும்.

## குலைப்பு நடவடிக்கை

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவு நீக்கம் மற்றும் குலைப்பு நடவடிக்கை தொடர்பான சில அறிவுறுத்தல்கள் பின்வருமாறு.

செயலிழந்த கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வினை பலவருட காலமாக தொடர்ந்து மேற்கொள்ளுதல் பயனற்ற செயற்பாடாகும். அதுமட்டுமல்லாது ஆளணிப் பற்றாக்குறை நிலவுகையில் இத்தகைய சங்கங்களுக்கு மூன்று, நான்கு நாட்கள் செலவிட்டு கணக்காய்வு ஒன்றினை நிறைவு செய்தலும் பயனற்ற செயற்பாடேயாகும்.

1. கூட்டுறவுச் சங்கங்கள் சட்டப்பிரிவு 50இன் கீழ் பின்வரும் சந்தர்ப்பங்களில் கூட்டுறவுச் சங்கமொன்றின் பதிவினை நீக்கம் செய்யலாம்.

   அ) சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 10ற்கு குறைவாக இருக்கும்போது.

   ஆ) பதிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டு காலத்தில் தொழிற்பாட்டினை ஆரம்பிக்க தவறியவிடத்து,

   அல்லது

   தொடர்ச்சியாக இரு பூரண ஆண்டுகளுக்கு மேல் தொழிற்படத் தவறிய விடத்து,

தங்கள் பிரிவில் 50(ஆ) பிரிவின்கீழ் பதிவு நீக்கம் செய்யக்கூடிய பல கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. எனவே தாங்கள்,

- இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களை இனங்காணவும்.
- இறுதி வரையான காலம் வரை கணக்காய்வினை தொடர்ச்சியாக செய்துமுடிக்கவும்.
- இறுதி கணக்காய்வுத் திகதியில் முன்கூறப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 50(ஆ) பிரிவின்கீழான பூரணமானதும், சரியானதுமான அறிக்கையினை இரு பிரதிகளில் பெற்றுக்கொள்ளவும்.

- 50(ஆ) பிரிவின் கீழான அறிக்கை கிடைக்கப்பெற்றதும், சங்கத்தின் பொதுக் கூட்டத்தினை அழைத்து, பதிவழிப்பதற்கு ஆட்சேபனை ஏதும் உள்ளதா என்பதனை கேட்டறியவும்.

- ஆட்சேபனை இல்லாதவிடத்து அப்பொதுச்சபை கூட்டக் குறிப்புடன் தங்களால் பரிசீலிக்கப்பட்டு சரியானது என உறுதிசெய்த 50(ஆ) பிரிவின்கீழான அறிக்கையின் மூலப் பிரதியையும் பதிவுநீக்கக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதும், குலைப்பாளராக செயற்படுவதற்கு நியமனம் செய்யவேண்டியவரின் பெயர், பதவி, தரம் ஆகிய விபரங்களையும் எனக்கு சமர்ப்பிக்கவும்.

- குலைப்பாளராக நியமனம் பெறுவதற்கான தகைமைகள் :
  துரம் 11'அ' பிரிவில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் முடிவுறுத்தியிருத்தல் வேண்டும்.

  முழு நேர குலைப்பாளராக எவரும் நியமிக்கப்படலாகாது.

2. குலைப்பாளரின் கடமைகள் :

   - நியமனம் பெற்ற குலைப்பாளர் பின்வரும் கடமைப் பொறுப்புக்களை நிறைவு செய்தலுக்காக நேரம் காலம் பாராது செயல்படல் வேண்டும்.

     1. புத்தகங்களைக் கையேற்றல்.
     2. சொத்துக்களைக் கையேற்றல்.
     3. கணக்காய்வுகளை உரிய திகதியில் செய்வித்தல்.
     4. பின்வரும் விபரங்களை அறிந்து கொள்ளுதல்.

        - குலைப்பிற்குரிய சொத்துக்கள்
        - செல்மதியாளர்
        - கழித்து எழுத வேண்டியவை
        - கடந்தகால, தற்கால உறுப்பினர்
        - கடந்தகால, தற்கால பணியாளர்

     5. அறவிடவேண்டிய நிதியை நிட்சயித்தல், பின் அறவிடுதல்.
     6. அறிவிட்ட பணத்தை பற்றுச்சீட்டு மூலம் காசேட்டில் உடன் பதிந்து பாதுகாத்தல்.
     7. சொத்துக்களைப் பாதுகாத்தல்.
     8. கணக்கு வைத்தலும் கணக்காய்வு செய்வித்தலும்.
     9. பணியாளர் பற்றிய நடவடிக்கை.
     10. உடன்படிக்கை பற்றிய நடவடிக்கை.
     11. சட்ட நடவடிக்கை.

12. தேவை ஏற்படும் போது இறுதியாக செயல்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களின் கூட்டத்தினை கூட்டுதல்.
13. உரிமை கோரல்.
14. சொத்துக்களைப் பங்கீடு செய்தல்.
15. மேலதிகம் தொடர்பாக செயல்படல்.
16. சங்கத்தினை கலைத்துவிடல்.

**1. புத்தகங்களைக் கையேற்றல் :**

சகல ஆவணங்களிலும் பக்கம் இலக்கமிடப்பட்டு 4 பிரதிகளில் கையேற்றல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1ம் பிரதி | - | பதிவாளர் |
| 2ம் பிரதி | - | உதவி ஆணையாளர் |
| 3ம் பிரதி | - | குலைப்பாளர் |
| 4ம் பிரதி | - | சங்கத்தின் பொறுப்பாளர் |

**2. சொத்துக்களைக் கையேற்றல் :**

முன்கூறிய வகையில் 4 பிரதிகளில் கையேற்றல்.

**3. சொத்துக்கள் பொறுப்புக்களை கணித்தல் :**

1. அறவிடக்கூடிய சொத்துக்கள் மற்றும் பணமாக்கக் கூடிய சொத்துக்களை இனங்கண்டு பட்டியல்படுத்தவும்.

2. செலுத்தவேண்டிய அரசநிதி, வங்கிக்கடன், நிறுவனக்கடன் ஏனைய செல்மதிகளை இனங்கண்டு பட்டியல்படுத்தவும்.

3. உறுப்பினர்கள், பணியாளர், வருமதியாளர், செல்மதியாளர்களுக்கு பகிரங்க அறிவித்தல் வழங்கி உரிமைக் கோரிக்கைகளைப் பெற்று செலுத்தவேண்டிய செல்மதிப் பட்டியலுடன் சேர்க்கவும்.

4. சங்கத்திற்கான வருமதிகள் எதனையும் முன்கூறிய உறுப்பினர், பணியாளர், வருமதியாளர் ஏற்றிருப்பின் அதனையும் அறவிடக்கூடிய சொத்துப்பட்டியலுடன் சேர்க்கவும்.

5. அறவிடக்கூடியதும் பணமாக்கக் கூடியதுமான சொத்துக்கள் பொறுப்புக்களை கணிப்பீடு செய்வதனூடாக கழித்து எழுத வேண்டிய சொத்துக்கள் பொறுப்புக்களையும் கணிப்பீடு செய்தல் வேண்டும்.

6. கழித்து எழுதுவதற்கான ஒவ்வொரு சொத்து பொறுப்பு தொடர்பாகவும் குலைப்பாளர் பின்வரும் விபரங்களைப் பெற்று கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 53(1)(ஏ) பிரிவின் கீழான தத்துவத்தின் கீழ் பொதுக்கூட்டத்தினை அழைத்து கழித்து எழுதுவதற்கான இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

7. அத்தகைய இணக்கப்பாட்டுத் தீர்மானத்துடன் உரிய வருமதி அல்லது செல்மதி (தனித்தனியாக காரணம் காட்டுதல் வேண்டும்) ஏன் கழித்து எழுத வேண்டுமென குலைப்பாளர் அபிப்பிராயப்படுகின்றார் என்பதற்கான காரணத்துடன் எனது அங்கீகாரத்திற்கு சமர்பித்தல் வேண்டும். (ரூ.500/க்கு குறைவானதாயின் உதவி ஆணையாளரின் அங்கீகாரம் பெறலாம்) ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. எனது அல்லது உதவி ஆணையாளரது அங்கீகாரம் பெறப்படாத எந்த ஒரு வருமதியும் அல்லது செல்மதியும் கழித்து எழுதப்படலாகாது.

**04. வருமதிகளை அறவிடுதல் :**

1. நிலையான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு எனது அனுமதியுடன் விற்பனை செய்யப்படல் வேண்டும். - முன்னுரிமை மதிப்பீட்டு பெறுமதியில் பிறிதொரு கூட்டுறவுச் சங்கம்.

2. வருமதிக்கடன் சுமுகமான முறையில் அறவீடு செய்தல் அல்லது போதிய ஆதாரங்கள் ஆட்கள் இருப்பின் நடுத்தீர்ப்பிற்கு ஆற்றுப்படுத்தி அறவிடல் அல்லது கழித்து எழுதுதல்.

**05. கணக்கு வைத்தல் :**

1. ஒவ்வொரு பதிவு நீக்கம் பெற்ற சங்கத்திற்குமென குலைப்பாளர் தனித்தனியான காசுப்புத்தகம் பற்றுச்சீட்டு பயன்படுத்துதல் வேண்டும்.

2. அறவிடப்பட்ட பணம் உடன் காசேட்டில் பதிந்து கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 54(2)ஆம் பிரிவின் கீழான "கூட்டுறவு நிதியக்" கணக்கில் தாமதியாது வைப்புச் செய்தல் வேண்டும்.

3. உறுப்பினர்களின் கடன் வருமதி வட்டி என்பன அறவிடும் அதிகாரம் ஒழிப்போனுக்குண்டு. ஆயினும் கடன் வழங்கமுடியாது. எனவே அறவீடு பற்றிய முறையான கணக்குகள் பேணப்படல் வேண்டும்.

4. பதிவழிக்கப்பட்ட திகதியிலிருந்து கலைப்பு முற்றுப்பெற்று ஒழித்துக்கட்டும் வரை கணக்காய்வுகளை செய்வித்தல் குலைப்பாளரின் கடமைப் பொறுப்பாகும்.

6. கழித்து எழுதுவதற்கான ஒவ்வொரு சொத்து பொறுப்பு தொடர்பாகவும் குலைப்பாளர் பின்வரும் விபரங்களைப் பெற்று கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 53(1)(ஏ) பிரிவின் கீழான தத்துவத்தின் கீழ் பொதுக்கூட்டத்தினை அழைத்து கழித்து எழுதுவதற்கான இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

7. அத்தகைய இணக்கப்பாட்டுத் தீர்மானத்துடன் உரிய வருமதி அல்லது செல்மதி (தனித்தனியாக காரணம் காட்டுதல் வேண்டும்) ஏன் கழித்து எழுத வேண்டுமென குலைப்பாளர் அபிப்பிராயப்படுகின்றார் என்பதற்கான காரணத்துடன் எனது அங்கீகாரத்திற்கு சமர்பித்தல் வேண்டும். (ரூ.500/க்கு குறைவானதாயின் உதவி ஆணையாளரின் அங்கீகாரம் பெறலாம்) ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதாரங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. எனது அல்லது உதவி ஆணையாளரது அங்கீகாரம் பெறப்படாத எந்த ஒரு வருமதியும் அல்லது செல்மதியும் கழித்து எழுதப்படலாகாது.

**04. வருமதிகளை அறவிடுதல் :**

1. நிலையான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு எனது அனுமதியுடன் விற்பனை செய்யப்படல் வேண்டும். - முன்னுரிமை மதிப்பீட்டு பெறுமதியில் பிறிதொரு கூட்டுறவுச் சங்கம்.

2. வருமதிக்கடன் சுமுகமான முறையில் அறவீடு செய்தல் அல்லது போதிய ஆதாரங்கள் ஆட்கள் இருப்பின் நடுத்தீர்ப்பிற்கு ஆற்றுப்படுத்தி அறவிடல் அல்லது கழித்து எழுதுதல்.

**05. கணக்கு வைத்தல் :**

1. ஒவ்வொரு பதிவு நீக்கம் பெற்ற சங்கத்திற்குமென குலைப்பாளர் தனித்தனியான காசுப்புத்தகம் பற்றுச்சீட்டு பயன்படுத்துதல் வேண்டும்.

2. அறவிடப்பட்ட பணம் உடன் காசேட்டில் பதிந்து கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 54(2)ஆம் பிரிவின் கீழான "கூட்டுறவு நிதியக்" கணக்கில் தாமதியாது வைப்புச் செய்தல் வேண்டும்.

3. உறுப்பினர்களின் கடன் வருமதி வட்டி என்பன அறவிடும் அதிகாரம் ஒழிப்போனுக்குண்டு. ஆயினும் கடன் வழங்கமுடியாது. எனவே அறவீடு பற்றிய முறையான கணக்குகள் பேணப்படல் வேண்டும்.

4. பதிவழிக்கப்பட்ட திகதியிலிருந்து கலைப்பு முற்றுப்பெற்று ஒழித்துக்கட்டும் வரை கணக்காய்வுகளை செய்வித்தல் குலைப்பாளரின் கடமைப் பொறுப்பாகும்.

5. ஒவ்வொரு மாத முடிவிலும் உரிய மாதத்தின் காசேட்டுப் பிரதியுடன் கூடியதான முன்னேற்ற அறிக்கையினை எனக்கும் உதவி ஆணையாளருக்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. எனது எழுத்து மூலமான முன் அங்கீகாரம் பெறப்படாது எக்கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படலாகாது.

**06. தீர்த்துக் கட்டுதல் :**

குலைப்பு நடவடிக்கை ஆரம்பிக்கும் திகதியில் கணக்காய்வொன்றினை குலைப்பாளர் செய்வித்தல் வேண்டும். இதன்போது மீண்டும் ஓர்தடவை பகிரங்க அறிவித்தல் வழங்கி முன்னர் தகவல் வழங்கத் தவறியவர்களின் வருமதிகள் செல்மதிகள் இருப்பின் அதனையும் உட்புகுத்தி குலைப்பிற்கான ஐந்தொகையை கணக்காய்விற்கு உட்படுத்தவும்.

இந்நிலையில்,

- தீர்த்துக் கட்ட வேண்டிய பொறுப்புக்கள் மட்டும் "பொறுப்பாகவும்" திரவச் சொத்துக்கள் "சொத்தாகவும்" ஐந்தொகையில் பிரதிபலிக்கும்.

- பொறுப்புக்களுக்கு மேற்பட்ட சொத்து காணப்படின் மொத்த செல்மதிகளையும செலுத்தி குலைப்பினை முடிவுறுத்த முடியும்.

- மொத்த பொறுப்புக்கு குறைவான சொத்து காணப்படின் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 57(1) பிரிவின் கீழான வழிமுறையில் ஒழித்துக் கட்டலுக்கான செலவு, அரச கடன்கள், அரச உத்தரவாதம் பெற்ற கடன்கள் (பதிவாளரின் சிபாரிசுடனான கடன்களும் செல்மதிகளும்) முழுமையாக வழங்கப்பட்டதன் பின் எஞ்சியுள்ள தொகை வீதாசார முறையில் தீர்ப்பதற்கான திட்டம் தயாரித்தல் வேண்டும்.

- குலைப்புத் திகதியிலான ஐந்தொகையுடன் தீர்த்துக் கட்டலுக்கான திட்டத்தினையும் எனக்கு சமர்ப்பித்து தீர்த்துக் கட்டலுக்கான எனது எழுத்து மூலமான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

- தீர்த்துக் கட்டலுக்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதும் எனக்கு முறைப்படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு புத்தகங்களில் பதிந்து குலைப்பு நடவடிக்கைகளை முடிவுறுத்துதல் வேண்டும்.

- குலைப்பு நடவடிக்கை முடிவுறுத்தியதும் கணக்குகள் உள்ளடங்கியதான விபர அறிக்கையுடன் எஞ்சியுள்ள மீதித்தொகை ஏதுமிருப்பின் அதற்கான காசோலையை எனக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

- தீர்த்துக் கட்டலுக்கான சகல கொடுப்பனவுகளும் என்னால் காசோலை மூலம் மேற்கொள்ளப்படுவதால் அதற்கான செலவுறுதிச் சிட்டைகள் பூரணப்படுத்தப்பட்டு கையொப்பத்துடனும் உரியவரின் தபால் முகவரியுடனும் எனக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**இ.இளங்கோவன்,**
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்.(வகிமா)

-கிம.